# SG பருவநிலை பேரணி 2023 பற்றி

## இந்த நிகழ்வு என்ன?

SG பருவநிலை பேரணி (SG Climate Rally), பருவநிலை மாற்றம் பற்றி அக்கறை கொண்டு அனைவருக்கும் பசுமையான, நியாயமான சிங்கப்பூரை வழங்க விரும்பும் அன்றாட சிங்கப்பூரர்களை ஒன்றிணைக்கும் நிகழ்வாகும். பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களான வெப்ப அலை, வெள்ளம் மற்றும் கடல் மட்ட உயர்வு போன்ற நிகழ்வுகள் ஏற்கனவே சிங்கப்பூரிலும், வட்டார நாடுகளிலும் உணரப்படுகின்றன. பைங்குடில் வளிக்களின் (greenhouse gas) உமிழ்வைக் குறைக்க சிங்கப்பூர் வலுவான, விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகவும் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு வலுவான ஆதரவை வழங்க வேண்டும் என்பதற்காகவும் நாம் இன்று இணைத்துள்ளோம்.

## இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் யார்?

நாங்கள் முற்றிலும் தன்னார்வத் தொண்டு செய்யும் அடித்தள குளுவாவோம். எங்களில் பலர் இளைஞர்களும் மாணவர்கழும் ஆவார்கள். அதே சமயம், கலைஞர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், பொறியியலாளர்கள் என பல தொழில் வல்லுநர்களும் எங்கள் அமைப்பில் உள்ளனர்.

## இந்த நிகழ்வை ஏன் ஏற்பாடு செய்ய வேண்டும்?

SG பருவநிலை பேரணியின் பணியின் மையப்புள்ளியாக பருவநிலை நீதி உள்ளது: பருவநிலை நெருக்கடிக்கு அதிகம் பொறுப்பில்லாதவர்களே பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள். நமது முந்தைய பரிந்துரைகளான 2050-க்குள் சிங்கப்பூர் நிகர-பூஜ்ஜிய கரிம வாயு உமிழ்வை அடையவேண்டும் என்ற இலக்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைந்தாலும், சிங்கப்பூரின் பருவநிலை முயற்சிகள் மேலும் லட்சியப்போக்குடனும், நம் அனைவரும் வாழக்கூடிய எதிர்காலத்தை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும்.

இன்று ஹாங் லிம் பூங்காவில் அதிக எண்ணிக்கையில் ஒன்றுகூடுவது, பருவநிலை நீதிக்கான நமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாகும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும்,இந்த ஒன்றுகூடல் பருவநிலை மாற்றம் ஒரு முக்கிய விவகாரம் என்றும்,

நாம் அதை சமாளிக்க அதிகம் செயல்பட வேண்டும் என்றும் குறிக்கிறது. பேச்சாளர் முனையில் (Speakers' Corner) ஒன்றுகூடுவது, நம் ஒவ்வொருவரின் குடிமை பொறுப்பின் நீண்ட வரலாற்றின் ஒரு பகுதியாக இருப்பதற்கும், பொது இடத்தை நமதாக்குவதற்கும், நமது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் ஒரு வழியாகும்.

## பருவநிலை நீதி என்றால் என்ன?

பருவநிலை நீதி என்பது சிங்கப்பூர் பசுமையான எதிர்காலத்தை நோக்கி மாறும்போது யாரும் பின்தங்கி விடாமல் இருப்பதை உறுதி செய்வதாகும். பருவநிலை நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்படும் குழுக்களுக்கு ஆதரவான கொள்கைகளை அரசாங்கங்கள் வரையறுப்பது இதன் பொருள். சுற்றுச்சூழலை மாசுபடுத்துபவர்களை அக்கேடுகளுக்கு பொறுப்பேற்க வைத்து, அவர்களை பருவநிலை மாற்றத்தை சமாளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுப்பட வைப்பது இதன் பொருள். மிக முக்கியமாக, ஒடுக்கப்பட்ட குழுக்களின் (எ.கா. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், பழங்குடி சமூகங்கள், வெளிநாட்டு கட்டுமான ஊழியர்கள்) அல்லல்களை செவிசாய்த்து ஆதரிப்பதும் பருவநிலை நீதியின் பொருளாகும் .

## பேரணியின் இலக்குகள் என்னென்ன?

நிகர-பூஜ்ஜிய கரிம வாயு உமிழ்வின் இலக்கை நியாயமாகவும் அனைவரையும் உள்ளடக்கி அடையவும் நாங்கள் பேரணியை ஏற்பாடு செய்கிறோம். எங்களிடம் மூன்று கோரிக்கைகள் உள்ளன:

**மாற்றத்தை துரிதப்படுத்தவும்:**
புதைபடிவ எரிபொருட்களிலிருந்து (Fossil Fuels) விலகி, புதுப்பிக்கப்படக் கூடிய எரிசக்தி (Renewable Energy) ஆற்றலை நோக்கிச் செல்லும் சிங்கப்பூரின் திட்டத்தில் ஒழிவுமறைவின்மையும் சீரிய லட்சிய இலக்குகளையும் நாங்கள் வலியுறுத்துகிறோம். கரிம வரியை வலுப்படுத்துதல், பசுமை மற்றும் பொது போக்குவரத்தில் முதலீடு செய்தல், பெரிய நிறுவனங்களுக்கு கரிம வாயு குறைப்பு இலக்குகளை கட்டாயப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

**சூழல் மண்டலதைப் (Ecosystem) பாதுகாக்கவும்:**
சிங்கப்பூரின் விலைமதிப்பற்ற சூழல் மண்டலதைப் பாதுகாக்கவும் மீட்டெடுக்கவும் வலுவான சுற்றுச்சூழல் சட்டங்களையும் ஆலோசனை செயல்முறைகளையும் நாங்கள் நாடுகிறோம். இயற்க்கை பாதுகாப்பிற்கு நிதியளிப்பதிலும்,

பல்லுயிர் ஆராய்ச்சி மற்றும் ஈடுபாட்டை எளிதாக்குவதிலும் மேலும் நிறுவன ஆதரவு தேவை.

மக்களுக்கு உந்துசக்தி கொடுங்கள்:
சிங்கப்பூரின் பருவநிலை நடவடிக்கையை நிறுவும் போது பொதுமக்களுடன், குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட சமூகங்கள், பழங்குடி சமூகங்கள், மறையும் தொழில்களில் உள்ள தொழிலாளர்களுடன் ஆக்கபூர்வமாக கலந்துரையாடி திட்டங்களை வகுக்க நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம். பள்ளிகளில் சுற்றுச்சூழல் கல்வியை வலுப்படுத்துவது மட்டுமல்லாது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை பழங்குடி வரலாறுகளையும் கலாச்சாரங்களையும் மையப்படுத்தி இருக்கவேண்டும்.

சிங்கப்பூர் அரசாங்கம் செயல்படுத்தவேண்டிய எங்கள் கொள்கைப் பரிந்துரைகளின் நீண்ட மற்றும் விரிவான பட்டியலையும் நாங்கள் தயாரித்துள்ளோம். எங்கள் இணையதளத்தில் அல்லது சுவரொட்டியில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் அவற்றை நீங்கள் காணலாம்.

## பேரணியில் என்ன நடவடிக்கைகள் நடைபெறுகின்றன? இன்று நான் என்ன செய்ய முடியும்?

பிற்பகல் 3 முதல் 5 மணி வரை, பலவிதமான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன:

| நடவடிக்கை | என்ன நடக்கிறது? |
| --- | --- |

| | |
|---|---|
| எனது எம்.பி.க்கு அஞ்சல் அட்டைகள் அனுப்புதல் | பேரணியில் கலந்துகொள்பவர்கள் ஈடுபடவேண்டிய முக்கிய நடவடிக்கை, அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினருக்கோ (MP) அல்லது அவர்கள் விரும்பும் அரசியல் பிரதிநிதிகளுக்கோ (எ.கா. பிரதமர் லீ, அமைச்சர் கிரேஸ் ஃபூ, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் தர்மன்) அஞ்சல் அட்டையை எழுதுவதே ஆகும். இந்த அஞ்சலட்டையில், பருவநிலை  நெருக்கடியைத் தடுக்க நாம் இன்னும் அதிகமாகச் செயல்படவேண்டும் என்று அரசாங்கத்திடம் தெரிவிக்க நீங்கள் எதை வேண்டுமானாலும் எழுதலாம் அல்லது வரையலாம்.<br><br>உங்கள் அஞ்சலட்டையில் நீங்கள் பார்க்க விரும்பும் பருவநிலை நடவடிக்கைக் கொள்கை மாற்றங்கள் (எங்கள் கொள்கை பரிந்துரைகளின் அடிப்படையில்) அல்லது சிங்கப்பூரில் பருவநிலை நீதியைப் பற்றி நீங்கள் ஏன் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டுகிறீர்கள் என்பது போன்ற தனிப்பட்ட செய்திகளை  சேர்க்கலாம்.<br><br>இன்று நாங்கள் உங்களிடமிருந்து பெரும் ஆயிரக்கணக்கான அஞ்சல் அட்டைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, நாடாளுமன்றத்தில் அதிக லட்சியபோக்கு கொண்ட பருவநிலை நடவடிக்கைக் கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுக்க உதவும்! |
| சமூக சாவடி | 12 வெவ்வேறு சுற்றுச்சூழல் மற்றும் குடிமை சமூகக் குழுக்களைச் சந்தித்து அவர்களின் சாவடிகளைப் பார்வையிடவும், அவர்கள் புரியும் பணிகளில் பருவநிலை நெருக்கடி எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதைப் பற்றியம் அறியவும். |
| கற்றல் முனை | எங்கள் இழுப்பான் அறிவிப்பு பலகை பகுதிக்கு வருகை தந்து  சிங்கப்பூரில் பருவநிலை நெருக்கடியும் பருவநிலை நீதியும்  ஏன் மிகவும் முக்கியமானது என்பதைப் பற்றி மேலும் அறிக. |

| | |
|---|---|
| பருவ நிலை மாற்ற விளை யாட்டு கள் | வேடிக்கையான, எளிமையான நடவடிக்கைகளுடன் இரண்டு விளையாட்டு சாவடிகள் உள்ளன. இது 5 வயதுக்கு மேற்பட்ட எவருக்கும் உகந்தது.<br>● சூப் டாஸ் **(Soup Toss):** உலகெங்கிலும் உள்ள பருவநிலை ஆர்வலர்கள் போல ஓவியங்கள் மீது சூப்பை வீச முயற்சிக்கவும்!<br>● ஜெயண்ட் ஜெங்கா **(Giant Jenga):** எங்களின் பருவநிலை கேள்விகளுக்குப் பதிலளித்து, கூட்டு நடவடிக்கையின் கோபுரத்தை நிலைநிறுத்த உதவுங்கள்! |
| அறிவி ப்பு அட் டை தயாரி க்கும் பட்ட றை | இது ஒரு புத்தாக்க ஓவியம்  செய்யும் இடமாகும், நீங்கள் அறிவிப்பு அட்டை ஒன்றைக் கொண்டுவரவில்லை  எனில் இங்கு அதை உருவாக்கலாம் அல்லது உங்கள் செய்தியைப் பலருக்கு கொண்டுசெல்ல முக வர்ணத்தையும் பயன்படுத்தலாம். |
| புவி உணர் ச்சிகள் | இது சமூகத்துடன் அளவளாவும் நடவடிக்கையாகும், இங்கு பருவநிலை நெருக்கடியைப் பற்றி நீங்கள் சகஜமாக உரையாடலாம், பருவநிலை மாற்றம் பற்றி நம்மில் பெரும்பாலோர் உணரும் கடினமான உணர்ச்சிகளை மையமாகக் கொண்டு நீங்கள் கலந்துரையாடலாம். இந்த உரையாடல்களை உங்களுடன் பேரணிக்கு வந்தவர்களுடனோ அல்லது புதிய நபர்களுடனோ மேற்கொள்ளலாம்! |
| பருவ நிலை மாற்ற ஆர்வ லர்க ளின் **ARcTio n** | இது பருவநிலை நெருக்கடி, சுற்றுச்சூழல் நீதி இயக்கங்களால்  ஈர்க்கப்பட்ட உள்ளூர் கலைஞர்களின் காட்சிப் பகுதியாகும். |
| இயற் கை மு னை: | புத்தகங்கள் மூலமும்  கலை நடவடிக்கைகளின் மூலமும் பருவநிலை மாற்றத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இது குடும்பங்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற இடமாகும். |

| | |
|---|---|
| குழந்தைகள் விளையாட்டு நிலையம்! | |

மாலை 5 மணி முதல் 7 மணி வரை, உரைகள், கலைப்படைப்புகள் கொண்ட சிறப்பு நிகழ்ச்சிக்காக மேடையின் முன் கூடுவோம்.

## பேரணியில் இசைப் படைக்கப்போவது யார்?

மாலை 5 மணி முதல், சிங்கப்பூர் இசைக்கலைஞர்களின் 3 நிகழ்ச்சிகள் உள்ளன:

1. Cactus Cactus குழு இந்த நிகழ்ச்சியை உற்சாகத்துடன் தொடங்குவார்கள். பல்வேறு வகையான இசையிலிருந்து தழுவி மனதை வருடும் புதுமையான garage-rock fury இசையை படைக்கவிருக்கின்றனர்.

2. அடுத்ததாக, RENE சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரு சுயேட்சை கலைஞர். அர்த்தமுள்ள, பிறர் எளிதில் தொடர்புபடுத்திக்கொள்ளக்கூடிய பாடல் வரிகள், செழுமையான குரல் மற்றும் கவர்ச்சியான கிட்டார் வரிகள் அவரது தனித்துவமான இசை பாணிக்கு வழி வகுக்கின்றன.

3. Woes நிகழ்ச்சியின் இறுதி குழுவாகும். Woes சிங்கப்பூரில் 5 பேர் கொண்ட கணித (math) ராக் இசைக்குழு ஆகும். உற்சாகமான பல்லவியுடன், மனதை நெகிழவைக்கும் வரிகளை இணைத்து, Woes செம்மையான, புத்துணர்ச்சி தரும் இசையைப் புனைவார்கள்.

## பேரணியில் பேசுவது யார்?

5 உத்வேகமான சிங்கப்பூர் வாசிகள் பருவநிலை மாற்றம் குறித்தான தங்கள் அனுபவங்களையும் சிங்கப்பூர் எதனால், எவ்வாறு வலுவான பருவநிலை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது பற்றி பேசுவார்கள்.

1. ஹோ சியாங் தியான் (Ho Xiang Tian) இளைய பருவநிலை ஆர்வலர் ஆவார். அவர் வலுவான பெருநிறுவன பருவநிலை நடவடிக்கையின் அவசியத்தைப் பற்றி பேசுவார்.

2. நூர் சியாஸ்வான் பின் அப்துல் மஜித் (Nor Syazwan Bin Abdul Majid) உபின் ஒராங் புலாவ் பழங்குடியின் வம்சாவளியைச் சேர்ந்தவர். பருவநிலை நடவடிக்கைக்கு பழங்குடி பழக்க வழக்கங்கள் எவ்வாறு உறுதுணையாக அமைகிறது என எடுத்துரைப்பார்.

3. மது அர்த்தநாரி (Madhu Ardhanari) நிலைப்புத்தன்மை நிபுணர் மற்றும் ஆராய்ச்சியாளர் ஆவார். அவர் நம் வட்டார நாடுகளின் பருவநிலை நடவடிக்கையின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசுவார்.

4. மார்லினா யாசெட் (Marlina Yased) ஒரு தாயும் சமூகப் பணியாளரும் ஆவார். அவர் சிங்கப்பூரில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களைப் பற்றி பேசுவார்.

5. டாக்டர் கெ மின் (Dr. Geh Min) ஒரு மருத்துவரும் முன்னாள் நியமன நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். அவர் பருவநிலை நெருக்கடி எவ்வாறு மனித மற்றும் புவி ஆரோக்கியத்தை பாதிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவார்.

## என்ன அணுகல் சேவைகள் அல்லது பிற ஆதரவு உள்ளது?

இந்த பேரணி வயது, இயலாமை, மொழிகள் மற்றும் பலவற்றை தாண்டி சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகள் அனைவரையும் வரவேற்க விரும்புகிறது. இந்த நிகழ்வை முடிந்தவரை அனைவரையும் உள்ளடக்கியதாக நடத்த, நாங்கள் கீழ்காணும் சௌகரியங்களை ஏற்பாடு செய்துள்ளோம்:

- மூத்தோர், சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்கள் மற்றும் அணுகல் தேவைகள் உள்ள எவருக்கும் முன்னுரிமை உண்டு.

- நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் ஓய்வு பகுதிக்கு செல்லலாம். மேலும் முதலுதவி சாவடியில், தொண்டூழிய முதலுதவியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

- தொண்டூழிய மொழிபெயர்ப்பாளர்கள் மலாய், சீன மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்க உள்ளனர்.

- மாலை 5 மணி முதல் பேச்சாளர்களின் பேச்சுகளுக்கு சிங்கப்பூர் சைகை மொழி விளக்கம்.

- சைகை மொழி விளக்கம் தேவைப்படுபவர்களுக்கு நாற்காலிகளுடன் கூடிய ஒதுக்கீடு செய்யப்பட்ட இருக்கை அல்லது பின் சாய்ந்து உட்கார சரியான இருக்கை.

- உங்களுக்கு ஏதேனும் கூடுதல் உதவி தேவைப்பட்டால், பிரத்யேக அணுகல்தன்மை தொண்டூழியர்கள்.

- அவசரமாக பயன்படுத்த வாடகை கழிப்பறைகள் மற்றும் தண்ணீர் நிரப்பும் நிலையங்கள். இல்லையெனில், மக்கள் கழக கட்டிடம், ஹேவ்லாக் 2 அல்லது சைனாடவுன் பாயின்ட்டில் உள்ள கழிப்பறைகளைப் பயன்படுத்த வேண்டுகிறோம்.

### பேரணிக்கு எவ்வாறு நிதி திரட்டுகிறது, பணம் எங்கே போகிறது?

பொதுமக்களின் அன்பான நன்கொடைகளின் மூலம் பேரணிக்கு முழுக்க முழுக்க நிதி திரட்டப்பட்டது. திரட்டப்பட்ட பணம் அனைத்தும் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர்கள், தளவாடங்கள், கூடாரம், ஒலி-ஒளி அமைப்புகள் போன்ற உபகரணங்களைப் பெறுவதற்கும் முதலுதவி, கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற பாதுகாப்பு அம்சங்களை  உறுதிப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது.

### நான் ஏற்கனவே மறுசுழற்சி, பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துதல், தோட்டம் அமைத்தல், கடற்கரையை சுத்தம் செய்தல் போன்ற குறிப்பிடத்தக்க வாழ்க்கை முறை மாற்றங்களை செய்துள்ளேன். அது போதாதா?

மிக நன்று, இந்த வாழ்க்கை முறையை நீங்கள் தொடர வேண்டும்! சிங்கப்பூரில் தனிநபர் கரிம வாயு உமிழ்வு அதிகமாக இருப்பதால் .தனிப்பட்ட செயல்களில் கவனம் செலுத்தும் பல நிறுவனங்கள் உள்ளன. இருப்பினும், 2020-இன் புள்ளி விவரம் படி, நமது தேசிய உமிழ்வுகளில் 7.6% மட்டுமே குடும்பங்களுக்குப் பொறுப்பாகும், அதனால்  தனிப்பட்ட  மாற்றங்களால் பருவநிலைக்கு தாக்கம்

குறைவாகவே உள்ளது. மேலும், இந்த மாற்றங்களைச் செய்வதற்கு அனைவருக்கும் நேரமோ பொருள் பலமோ இருப்பதில்லை. எனவே, கூட்டு நடவடிக்கை மிகவும் முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம் - உலகெங்கிலும் இது போன்ற போராட்டங்கள் மற்றும் பேரணிகள் வலுவான பருவநிலை கொள்கைகளை அரசாங்கங்கள் செயல்படுத்த தூண்டியுள்ளது. எங்கள் 2019 பேரணியினால் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறிய எங்கள் சமூக சாவடிக்கு சென்று பார்க்கலாம்!

## நான் எவ்வாறு பங்களிக்க முடியும்?

நாங்கள் இன்றும் எங்களின் நிதி திரட்டும் முயற்சியை தொடர்கிறோம். நன்கொடை வழங்கி இலவசப் பரிசைப் பெற, SG பருவநிலை பேரணிச் சாவடிக்குச் செல்லவும்! நீங்கள் நீண்ட கால அடிப்படையில் பங்களிக்க ஆர்வமாக இருந்தால், இயக்கத்தில் எவ்வாறு ஈடுபடுவது என்பது பற்றி எங்கள் தொண்டூழியர்களுடன் பேசவும்.